# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.15/2021

DW-1 அகிலாண்டேஸ்வரி நாள்.08.10.2025

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

என் தகப்பனார் பெயர் பிச்சைபிள்ளை. என்அண்ணன் பெயர் திருஞானம். திருஞானத்தின் மனைவி பெயர் அமுதா. எனக்கும், வீரம்மாளுக்கும் ஏற்கனவே நடந்த வழக்கில் சம்பத் என்தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்டார் என்றால் சரிதான். அவர் இந்த வழக்கில் வாதி தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் என்தரப்பில் வழக்கறிஞர் தாக்கல் செய்த வக்கலாத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். என்னிடம் காட்டப்படும் எதிர்வழக்குரையில் உள்ளது என்னுடைய கையெழுத்து அல்ல. வாதி போர்சரியாக என்னுடைய கையெழுத்து போட்டு ஆவணம் தயார் செய்ததாக காவல்நிலையத்தில் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்று காட்ட நான் கையெழுத்து நிபுணரின் பரிசோதனைக்கு அதை அனுப்ப நடவடிக்கை எடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ஒப்பந்தத்தில் நான் கையெழுத்து செய்து எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதில் முதல் சாட்சியாக என்சகோதரர் திருஞானம் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரியல்ல. திருஞானம் எப்படி கையெழுத்து போடுவார் என்று தெரியுமா என்றால் அவர் கையெழுத்து போடவில்லை. அவர் கையெழுத்து எப்படி போடுவார் என்று எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் வாதி எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும், அதை என் சகோதரர் திருஞானம் மூலம் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தப்படி வாதி எனக்கு ரூ.15லட்சம் முன்பணம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பாக்கி பணத்தை கொடுத்து கிரயம் முடிக்க வாதி தயாராக தான் இருந்தார் என்றும், நான் தான் அதற்கு வரவில்லை என்றால் சரியல்ல. வீரம்மாள் தாக்கல் செய்த மேல்முறையீட்டில் அழைப்பாணை இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது வந்ததா என்றால் இல்லை. வீரம்மாள் தாக்கல் செய்த மேல்முறையீடு நிலுவையில் உள்ளதா என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6 கிரய ஒப்பந்தம் உண்மையான கிரய ஒப்பந்தம் என்றும், அதன் அடிப்படையில் நான் பாக்கி பணத்தை பெற்றுக்கொண்டு வாதிக்கு ஆதரவாக கிரயபத்திரம் எழுதிகொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 2020 டிசம்பர் மாதம் 2வது வாரத்தில் வாதி கிராமத்தில் உள்ள பெரியவர்களை அழைத்துவந்து என்னிடம் கிரயம்

முடிக்க கேட்டார் என்றால் சரியல்ல. நான் அதற்கு சரியான பதில் கூறாததால் 12.01.2021 வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கறிஞர் மூலமும், நீதிமன்றம் மூலமும் அறிவிப்பு வந்தால் நான் கையெழுத்து செய்து பெற்றுக்கொள்ளும் பழக்கம் கிடையாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனக்கு ஆஜராக வந்த அழைப்பாணையில் என்அண்ணி அமுதா தான் கையெழுத்து செய்து பெற்றுக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. கிரயஒப்பந்த சம்மந்தமாக தான் வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்ற விவரம் தெரிந்து என்அண்ணன் கையெழுத்து செய்து அதை பெற்றுக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. தாவாசொத்தை விலைக்கு வாங்க போட்டி அதிகம் என்றால் சரிதான். வாதி கிரயஒப்பந்தம் ஏற்படுத்தி முன்பணம் கொடுத்தபின்பு பல நபர்கள் என்னை அணுகி அதிக விலைக்கு கேட்டார்கள் என்றால் வாதி முன்பணம் கொடுக்கவில்லை. பலநபர்கள் அதிக விலைக்கு கேட்டார்கள். நான் அதிக பணம் பெற வேண்டும் என்ற ஆசையில் தாவா கிரய ஒப்பந்தத்தை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. கையெழுத்து நிபுணரின் பரிசோதனைக்கு கிரய ஒப்பந்தத்தை அனுப்பினால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அதை நான் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் கையெழுத்து மோசடியாக உள்ளது என்று கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. கிரயஒப்பந்த தேதியிலிருந்து இன்றைய தேதிவரை பாக்கி தொகை செலுத்த வாதி தயாராக இருக்கிறார் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.